Registered as a NewsPaper

விலை ரூபா - 07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் - 10 | 23-03-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை - 034

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9261) 077-6059672

# புலிகள் மீதான தடையை நீக்கக்கோரும் மனு

# 'பொடோ' மறு ஆய்வுக்குழுவால் விசாரிக்கப்படும்

## ஆய்வுக்குழுத்தலைவர் சகாரியா தெரிவிப்பு

**பொடோ எனப்படும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டிருப்பதை எதிர்த்து தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன் கொடுத்த மனுவை தாம் விசாரிக்கப்போவதாக பொடோ மறு ஆய்வுக் குழுவின் தலைவர் சகாரியா கூறியுள்ளார்.**

வைகோ மற்றும் நக்கீரன் கோபால் ஆகியோர் மீதான வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, பொடோ மறு ஆய்வுக்குழு நீதிபதி குறுக்கிட்டு மத்திய அரசிடம் இருந்து ஒரு பரிந்துரை வந்துள்ளதாகவும், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோருமாறு ஒரு மனு வந்துள்ளதாகவும் அந்த மனுவை தாங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் மத்திய அரசிற்கு எழுதிய கடிதத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் பொடோ சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை மத்திய அரசு மறு ஆய்வு செய்து அந்தத் தடையை நீக்கவேண்டுமெனவும் கோரியிருந்தார். ஆனால், அந்த மனு நிராகரிக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் 12 ஆம் திகதி நெடுமாறன் அவர்கள் மீண்டும் மத்திய அரசிற்கு ஒரு மனுவை அனுப்பியிருந்தார். அந்த மனு தொடர்பாக இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு டிசம்பர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கிப் பிரதிநிதி இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான உலகவங்கிப் பிரதிநிதி பீற்ற கரோல், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஆகியோர் இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடையும் இவர்கள் காலை பத்து மணிக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(லோ)

## தயாசந்தகிரி யாழ்.திடீர்விஜயம்

சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் தயா சந்தகிரி யாழ். குடாநாட்டிலுள்ள கடற்படை முகாங்களுக்கு திடீர்ப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கு அவசரபுனரமைப்புக்கு தமது ஆட்சியில் விசேட அதிகாரசபையாம்

### ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

தமது முன்னணியின் ஆட்சியின் கீழ் வடக்கு கிழக்கு பகுதியில் அவசர புனரமைப்புக்கு விசேட அதிகாரசபை ஒன்று அமைக்கப்படும் என ஜே.வி.பி. யின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் வடக்கு கிழக்கில் மின்னுற்பத்திமையம் மூன்று தொழில் நுட்ப கல்லூரிகள் ஐஸ் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் அத்துடன்யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் புனரமைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இந்த தேர்தலில் தாம் குறிப்பிடத்தக்க ஆசனங்களை பெறப்போவதாக கூறியுள்ள ஜாதிக ஹெல உறுமய, அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் மூலம் அரசாங்கத்தை அமைத்து நாட்டில் பௌத்த ஆட்சியை ஏற்படுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளது. (32)

## இரு தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்ட ஐ.ம.சு.மு. நாட்டை எவ்வாறு ஆளப்போகிறது?

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கேள்வி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று ஊடக மாநாடு ஒன்றை நடத்தினார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, முதலில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் சமாதானம் தொடர்பில் அனைத்து தரப்புக்களுடனும் பேசப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சனாதிபதி மேடையில் பேசும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனையை அடிப்படையாகக் கொள்ளலாம் எனக் கூறிவருகிறார். எனவே, பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில், அந்த முன்னணி மீள் திருத்தப்பட்ட இரண்டாவது தேர்தல் விஞ்ஞாபனத்தினை வெளியிட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். விஞ்ஞாபனத்தில் பல முரண்பாடுகளை கொண்டுள்ள இந்த முன்னணி எவ்வாறு நாட்டை ஆளப்போகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, இந்த கேள்விக்கு பதிலளித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் சுசில் பிரேமசுயந்த கடந்த மார்ச் 11ஆம் திகதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் உறுதிமொழிகளை தமிழ் மக்கள் நகைப்புடனேயே நோக்குகின்றனர்

### சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சனாதிபதியின் கருத்துக்களையும் உறுதிமொழிகளையும் வடக்கு கிழக்கு மக்கள் நகைப்புடன் நோக்குவதாக பிரதமர் கூறியுள்ளார். தியாத்தலாவ, வெலிமட மற்றும் நுவரெலியாவில் பிரச்சாரம் மேற்கொண்டார். இதன்போது கருத்துரைத்தஅவர் சமாதான முன்னெடுப்பு மேற்கொள்ளும்போது இதுவரை சனாதிபதி 3தடவைகள் அதற்கு தடை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால வரைவினை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படலாம். என கூறுகிறது.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி புதிதாக ஒப்பந்தம் ஒன்று மேற்கொண்டு அதன் மூலமே பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும் என கூறுகிறது அடிப்படையிலேயே இவ்வாறு முரண்பாடு கொண்டிருக்கும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.மு.வின் தேர்தல் விஞ்ஞாபனமென ஐ.தே.க. போலிகளை விநியோகித்துவருகிறது

### - ஐ.ம.சு. முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி போலியான கொள்கை ஆவணங்களைத் தயாரித்து முன்னணியின் விஞ்ஞாபனமென பல பிரதேசங்களில் விநியோகித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

அதேவேளை, விநியோகிக்கப்படும் அந்த விஞ்ஞாபனத்தில் தமது கொள்கைகள் திரிவுபடுத்தப்பட்டுள்ளதாகத்தகவல் கிடைத்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியுள்ளது.

இது குறித்து மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி விடுத்துள்ள அறிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடந்த 11ஆம் திகதி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனமே அதன் அரி

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்ட மக்கள் வாக்களிப்பு நடைமுறை குறித்து அரச அதிபர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தற்போது நடைபெறவுள்ள தேர்தலின்போது கிளிநொச்சி மக்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க மேற்கொள்ளப்பெற்றுள்ள நடவடிக்கைகள் குறித்து கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

□ தற்போது நடைபெறவுள்ள தேர்தலில் கிளிநொச்சி வாழ் மக்களும் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலே எத்தகைய ஏற்பாடுகள் கிளிநொச்சி வாழ் மக்கள் வாக்களிக்கச் செய்யப்பட்டிருக்கின்றது?

கிளிநொச்சி வாழ் மக்கள் இப்பொழுது நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்கும் வகையிலே தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர், படை அதிகாரிகள் கொண்ட மாநாட்டிலே ஏற்பாடுகள் செய்யப்பெற்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி எங்களுடைய வாக்காளர்கள் இராணுவச் சூனிய பிராந்தியத்தைத் தாண்டி வழமையாகப் பிரயாணிகள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பகுதியிலே 51 வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையிலே எங்களது மாவட்ட சகல வாக்காளர்களும் குறிப்பாக கிளிநொச்சியிலிருந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## - இது தேர்தல்காலம் -

## இறந்தவரிடம் குசலம் விசாரித்து சங்கரி கடிதம் அனுப்பி வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று வருடங்களுக்கு முன் இறந்துவிட்ட ஒருவரைக் குசலம் விசாரித்து அவரது வாக்கைத்தமக்கே வழங்கும்படியும் யாழ்.மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

யாழ்.மாவட்ட சுயேட்சைக்குழுவொன்றின் தலைமை வேட்பாளரான ஆனந்த சங்கரியே அவ்வாறு கடிதம் எழுதியவராவர்.

பூநகரிப்பிரதேசத்தில் பிரபல்யமான முக்கியஸ்தர் ஒருவர் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரே இறந்து விட்டார் இதனை அறிந்திராத ஆனந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# நட்டாங்கண்டல்-முகமாலை பேருந்துப்பணிவழித்தட மாற்றம்



நட்டாங்கண்டல், பாலையடி, கொல்லவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், மல்லாவி பேருந்து நிலையம், கொல்லவிளாங்குளம், மாங்குளம், முகமாலை வழித்தடம் 26.03.2004 ஆம் நாளிலிருந்து நட்டாங்கண்டல், பாலையடி, கறுப்பிகுளம், மல்லாவி, பேருந்து நிலையம். ஒட்டறுத்தகுளம், கொல்லவிளாங்கும், மாங்குளம், முகமாலை. பணியாக மாற்றப்பட்டுள்ளது. என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)

# துணுக்காய்-புதுக்குடியிருப்பு ஒரு நேரப் பேருந்துப்பணி 26/03/2004ஆம் நாளிலிருந்து இரு நேர முழுப்பணியாக மாற்றம்



மேற்படி பணி 26.03.2004 ஆம் நாளிலிருந்து இருநேர முழுப்பணியாக மாற்றப்பட்டுள்ளது. என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருக்கின்றோம்.

## துணுக்காய் - புதுக்குடியிருப்பு

நேர ஒழுங்கு:

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | புளியம்பொக்கணை | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.15 | 08.30 | 08.50 | 09.10 | 09.50-10.10 | 10.30-10.40 | 11.10 | 11.25 | 11.45 | 12.30 |
| மாலை 01.30 | 01.45 | 02.05 | 02.45 | 03.25-03.45 | 04.05-04.15 | 04.45 | 05.00 | 05.30 | 06.10 |

## புதுக்குடியிருப்பு - துணுக்காய்

நேர ஒழுங்கு:

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | தருமபுரம் | இராமநாதபுரம் | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.15 | 09.00 | 09.25 | 09.35 | 09.50 | 10.20-10.30 | 10.50-11.10 | 11.50 | 12.30 | 12.50 | 01.00 |
| மாலை 01.30 | 02.15 | 02.40 | 02.50 | 03.05 | 03.35-03.45 | 04.05-04.25 | 05.05 | 05.45 | 06.05 | 06.15 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)



# மல்லாவி-மாங்குளம்-முகமாலை (பளை) பேருந்துப்பணி நேர மாற்றம்

மேற்படி பணி 26.03.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைய நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்சியுடன் அறியத்தருகின்றோம்.

## மல்லாவி - மாங்குளம் - முகமாலை

நேர ஒழுங்கு:

| மல்லாவி | பாலையடி | கொல்லவிளாங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 09.15 | 09.35 | 09.45 | 10.20 | 11.00-11.20 | 11.40-11.50 | 12.10 | 12.35 | 12.40 | 01.00 |

## முகமாலை - மாங்குளம் - மல்லாவி

நேர ஒழுங்கு:

| முகமாலை (பளை) | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | கொல்லவிளாங்குளம் | பாலையடி | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 05.30 | 05.45 | 05.50 | 06.15 | 06.25-06.45 | 07.05-07.25 | 08.05 | 08.40 | 08.50 | 09.15 |

## முகமாலை - கோணாவில்- மல்லாவி


நேர ஒழுங்கு:

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | துணுக்காய் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.45 | 03.50 | 04.15 | 04.25-04.45 | 05.45 | 06.50 | 07.15 | 07.30 |

குறிப்பு:- மாலை 03.30 மணிக்கு தொடங்கும் முகமாலை-மாங்குளம்- மல்லாவி பேருந்துப்பணி 26.03.2004ஆம் நாளிலிருந்து முகமாலை-கோணாவில்-மல்லாவி பணியாக மாற்றம்

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)




ஈராக்மீது அமெரிக்க கூட்டுப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் ஒருவருடப் பூர்த்தி நாளன்று அமெரிக்காவின் கலிபோர்னியாவில் யுத்தத்துக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்களையும் யுத்தத்தில் கொல்லப்பட்ட 560 படையினரினதும் கொம்பாட் காலணிகளை லோஸ் ஏஞ்சலிலுள்ள சுதந்திர சதுக்கக்கட்டடத்தின் முன்பாக வைக்கப்பட்டுள்ளதையும் காண்க.

# இஸ்ரேலியப் படைவிலகல் திட்ட வரைவு கையளிப்பு

(ரெல் அவிவ்)

காஸாப்பகுதியிலிருந்து தனது நாட்டுப்படையினரை விலக்கிக் கொள்வது சம்பந்தமான திட்டவரைவு ஒன்றை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தனது கட்சியின் இடைக்கால அமைச்சர்களிடம் கொடுத்துள்ளார்.

மேற்காசிய அமைதித் திட்டம் வெற்றிபெறத் தவறினால் படையினரை விலக்கிக் கொள்வதே இஸ்ரேலிற்கு இருக்கின்ற ஒரே வழியென அவர் மேலும் அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேற்குக்கரை பகுதியிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ளும் போது கூடுதலாக பலஸ்தீனப் பகுதியை இஸ்ரேல் தனதாக்கிக் கொள்ளுமென பலஸ்தீனர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

பிரதமர் ஷெரோனின் இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தமை தெரிந்ததே.

## இருசிறுவர்கள் பலி!

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினமிரவு தீவிரவாதிகள் வீடொன்றின் மீது நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இரு சிறுவர்கள் பலியாகினர். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர். லஸ்கரி தொய்பா அமைப்பே காரணமென குற்றம சாட்டப்பட்டுள்ளது.

# அதிகாலையில் இராணுவ முகாம்மீது தாக்குதல் முப்பது பாகிஸ்தான் படையினர் உயிரிழப்பு!

## இராணுவ நடவடிக்கைக்கு பதிலடி

**பாகிஸ்தான் இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்று அதிகாலை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் முப்பது பாகிஸ்தான் படையினர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஆப்கானிஸ்தான் எல்லையோரமாக பாகிஸ்தானின் மேற்குப்பகுதி வனா என்ற இடத்திலேயே இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. மேற்படி இராணுவ முகாம் ரொக்கற்றுக்களால் தொடர்ச்சியாக தாக்கப்பட்டுள்ளன.

அல்-ஹைறதா அமைப்பினரே இந்தத்தாக்குதலை நடத்தியிருப்பதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தினர் ஆப்கான் எல்லையில் பழங்குடி இனமக்கள் வாழும் பகுதிகளில் அல்-ஹைறதா அமைப்பினருக்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாக கருதப்படுகின்றது.

கடந்த சிலநாட்களாக பாகிஸ்தான் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் மாலையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் ஆப்கானுடனான எல்லைப்பகுதியில் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தையும் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆப்கான் எல்லைப்பகுதியில் செயற்படுவதாக கூறப்படுகின்ற அல்-ஹைறதா பிரதிநிதிகளுடனான யுத்தத்தை தற்காலிகமாக நாம் நிறுத்திக்கொள்கிறோமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை இரு தரப்பினருக்குமிடையேயான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இவ் யுத்த நிறுத்தம் சாதகமாக அமையுமென கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மலைப்பிராந்திய எல்லைப் பகுதியில் இதுவரை நூற்றுக்கும் அதிகமான அல்-ஹைறதா சந்தேக நபர்கள் சரணடைந்துள்ளதாக பாகிஸ்தான் தரப்பில் கூறப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் இந்த யுத்த நிறுத்த ஏற்பாடு அல்-ஹைறதா உறுப்பினர்களை சரணடைய கோரும் நடவடிக்கையென பாக்கிஸ்தான் அறிவித்துள்ள போதிலும் அதன் எதிர்பார்க்கைக்கு மாறாக இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



றமலலாவுக்கருகில் கிராமம் ஒன்றில் இஸ்ரேலியர் உருவாக்கிய தடுப்புச் சுவரை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தீனர் மீது துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் இஸ்ரேல் படையினர்

# ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்ரேலியத் தாக்குதலில் பலி!

பலஸ்தீனத்தின் காஸாப்பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீக தலைவரும் ஸ்தாபகருமான ஷேக் அகமத் ஜஷீன் உட்பட 04பேர் இஸ்ரேலியர்கள் நேற்று நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், ஜஷீன் தனது இல்லத்திற்கு அருகேயுள்ள பள்ளிவாசலிலிருந்து வெளியே சென்றவேளை இஸ்ரேலியர்களின் ஹெலிகொப்டர்கள் இவரை இலக்குவைத்து தாக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

# பலஸ்தீன எல்லைகளை இஸ்ரேல் நேற்று மூடியது!

ஹமாஸ் இயக்கத்தலைவர் ஷேக் அகமத் ஜஷீன் நேற்று கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேற்குக்கரை, காஸா பகுதிகளின் எல்லைகள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை பலஸ்தீனமக்கள் ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளதால் இவர்கள் இஸ்ரேலிற்கு பிரவேசிக்காமல் தடுப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் இஸ்ரேலியர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் ஜஷீனை, ஓசாமா பின்லேடனுக்கு சமமாக ஒப்பிட்டு பேசியுள்ளார் அமைதியை ஏற்படுத்துவதற்காகவே இவரைக் கொன்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேபாளத்தில் 500 தீவிரவாதிகள் பலி

நேபாளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் 500 மாவோ தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதுடன் 18 இராணுவ வீரர்களும் ஒரு பொலிசாரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் மூலம் விமான நிலையத்தைக் கைப்பற்றும் இலக்காக தீவிரவாதிகள் இருந்தனரென நேபாள இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அல்ஜீரியாவிலுள்ள தூதரகத்தை பிரித்தானியா மூடியது!

## பாதுகாப்பு அச்சுறுத்தலே காரணம்

அல்ஜீரியாவில் உள்ள தனது தூதரகத்தை பிரித்தானியா நேற்று முன்தினம் மூடியுள்ளது. பாதுகாப்புக் காரணம் கருதி இத்தூதரகம் மூடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானிய தூதரக அதிகாரிகள் பாதுகாப்புக் கருதி தூதரகத்திலிருந்து வெளியேறி ஹொட்டேல் ஒன்றில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானின் மேற்குப் பகுதியில் கலவரம் பராட் நகர் கிளர்ச்சிக்குழு வசமானது!

## -அமைச்சர் படுகொலையை அடுத்து அனர்த்தம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதி நகரான பராட்டில் நடைபெற்ற கலவரங்களையடுத்து அந்நகரை ஆளுநருக்கு விசுவாசமான கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்துள்ளனர்.

முன்னதாக நேற்று முன்தினம் ஆப்கானின் விமானப் போக்குவரத்து அமைச்சர் மிர்வாயன் சித்திக் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அங்கு பெரும் கலவரம் வெடித்தது. அமைச்சரை தாங்கள் கொலை செய்ததாக ஆளுநர் இஸ்மைல்கான் தலைமையிலான மக்கள் படையெனும் கிளர்ச்சிக் குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் பராட் நகரில் கடும் சண்டைக்குப் பின்னர் ஆப்கான அரச படையினர் சிலர் கிளர்ச்சியாளர்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மேலும், கலவரங்களில் நூற்றுக்கும் மேலானோர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் இப்பகுதிகளில் சிறு சிறு மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# உயர் பதவிகளில் வெளிநாட்டவருக்கு இடமுண்டா காங்கிரஸ் நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும்

## - பாரதீய ஜனதாக்கட்சி வலியுறுத்து

(புதுடில்லி)

நாட்டின் மிக உயர்ந்த பதவிகளான சனாதிபதி, பிரதமர், தலைமை நீதிபதி போன்ற பதவிகளை வெளிநாட்டவர்கள் வகிக்க முடியுமா... எனும் விடயத்தில் காங்கிரஸ்கட்சி தமது நிலையை வெளியிடவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், வரும் தேர்தலில் வெற்றிபெற்று மத்தியில் ஆட்சியமைக்கும் வாய்ப்பு காங்கிரஸ்கட்சிக்கு ஏற்படுமானால் அதன் தலைவர் யார் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

உயர்பதவிகளில் வெளிநாட்டவர்கள் இருப்பது குறித்த பிரச்சினையில் பாரதீய ஜனதாக் கட்சி எந்தவொரு தனிப்பட்டவருக்கும் எதிராகவும் எழுப்பவில்லை என்றும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டே இவ்விடயம் தொடர்பாக சர்ச்சை எழுப்பியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



கடந்த சனியன்று பாக்தாத்துக்கருகில் ஈராக்கின் ரொக்கட் தாக்குதலில் சேதமான காரை உற்று அவதானிக்கும் ஈராக்கியர் ஒருவர் இச்சம்பவத்தில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஆறுபேர் காயமடைந்துமுள்ளனர்.




# ஜாம்பவான்கள்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி சிறிலங்காவுக்கான தனது சுற்றுப் பயணத்தை நிறைவு செய்ய ஒரேயொரு டெஸ்ட் போட்டி எஞ்சியுள்ள நிலையில் தாம் ஓர் உலகத் தரம் வாய்ந்த அணி என்பதைத் தொடர்ந்தும் அவுஸ்திரேலியா நிலைநிறுத்தியுள்ளது.



இன்று வரலாற்று பெருமை மிக்க பாகிஸ்தான்-இந்திய கிரிக்கெட் போட்டிகள் தலைப்புச் செய்தியாக மாறியுள்ள நிலையில் சிறிலங்காவுக்கான அவுஸ்திரேலிய சுற்றுலா பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சிறிலங்காவுக்கான சுற்றுலாவை கடந்தமாதம் அவுஸ்திரேலியா மேற்கொண்டது.

அவுஸ்திரேலியா அணியின் வெற்றிப்பயணத்தில் கணிசமான பங்குவகித்த அவ் அணியின் முன்னணி பந்துவீச்சாளர்கள் உபாதைகள் காரணமாக அணியில் இடம்பெறாத நிலையில் அவுஸ்திரேலியா சிறிலங்கா மண்ணில் பெரும் நெருக்கடிக்குள்ளாகும் என்ற நிலை பரவலாகக் காணப்பட்டதுடன் அதன் வெற்றிப் பயணத்திற்கு சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் துணையுடன் முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும் எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் நடந்ததோ வேறு. அவ் அணி அசைக்க முடியாத அணி என்பதை சிறிலங்காவில் நிருபிக்கத் தவறாததுடன் சிறிலங்கா அணிக்கு பல பாடங்களையும் கற்றுக்கொடுத்தது.


அதாவது எந்தவொரு நெருக்கடியான கட்டத்தி லும் எதிரணியின் வெற்றி வாய்ப்பை தமக்குச் சாதகமாக மாற்றுவதில் அவுஸ்திரேலியர்கள் கைதேர்ந்தவர்கள். அந்தளவிற்கு மதிநுட்பம் வாய்ந்த வீரர்களைத் தொடர்ந்தும் தம்வசம் கொண்டுள்ளதுடன் தமது வெற்றிப்பயணத்தில் சிறு தளர்வு ஏற்படுகின்ற போதெல்லாம் அதனை சீர் செய்வதில் மகா வல்லவர்கள் என்பதையும் வெளிப்படுத்தினர்.

இது அவுஸ்திரேலியர் விளையாட்டை முறையாகக் கற்றுக் கொண்டுள்ளதுடன் அதனை முழுமையாகவும் நேசிக்கின்றனர் என்பதை நிருபித்துநின்றது.

இதனை சிறிலங்காவுக்கு எதிராக நடந்துமுடிந்த இரு டெஸ்ட் போட்டிகளும் உணர்த்தி நிற்கின்றன.

இப்போட்டிகளில் களநிலைக் கேற்றவாறு துடுப்பாட்டம், பந்துவீச்சு என்பவற்றை மாற்றி அமைத்த விதமும் அதனூடாக பெற்ற வெற்றியும் அதன் வெற்றிப் பயணத்தின் இரகசியங்களாக உள்ளதை எவரும் மறுப்பதற்கில்லை.

முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்சில் 220 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்த அவுஸ்திரேலிய



அணி இரண்டாவது இனிங்சிற் காக பெரும் நெருக்கடியிலும் நிதானமாக ஆடிய விதமும் பின்னா சிறிலங்கா அணியை சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து வெற்றிபெற்றமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய அதேவேளை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் முதல் நாள் ஆட்டத்தின் மதிய போசன இடைவேளைக்கு முன்னரே 120 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டபோது கூட அதனை சவாலாக ஏற்ற அவுஸ். அணி போட்டியை தமக்கு சாதகமாக மாற்றி வெற்றிபெற்றமை மகத்தானது.

இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-2 என்ற நிலையில் கைப் பற்றிய அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரையும் தம் வசம் எடுத்துக்கொண்டது.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரையில் மேற்படி போட்டித் தொடர்கள் சவால் நிறைந்ததாக அமைந்த போதும் சோதனைகளும் வேதனைகளும் அவ் அணியை பெரிதும் பாதித் திருக்கும்.

ஏனெனில் வெற்றியின் விளிம்புக்கு சென்றும் வெற்றிபெற முடியாது போனமை அவ் அணியைப் பெரிதும் பாதித்திருப்பதுடன் ரசிகர்களின் வெறுப்பையும் சம்பாதிக்க நேர்ந்தது. இது அவ் அணியை விமர்சனத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

இது ஒருநாள் போட்டித் தொடரை இழந்த சிறிலங்கா அணிக்கு டெஸ்ட் தொடரையாவது கைப்பற்றிவிட வேண்டும் என்ற கனவை கலைத்ததுடன் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பரபரப்பையும் இல்லாது செய்துள்ளது.

இந்நிலைக்கு கடந்த 12 மாதங்களாக தடைக்கு உட்பட்டிருந்த சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்னின் மீள் வருகை பெரும் பங்காற்றியது. அவர் இரண்டு டெஸ்ட்போட்டிகளிலும் 20 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சிறிலங்கா துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்தார்.

ஒட்டுமொத்தத்தில் இச்சுற்றுப் போட்டி சர்வதேச அளவில் வெற்றிநாயகர்களாக வலம் வரும் அவுஸ்திரேலியர்களின் வெற்றிப்பயணத்தில் அனுகூலமாக அமைந்துள்ளதுடன் கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்கள் அவுஸ்திரேலியர்கள் என்பதையும் நிருபித்துள்ளது.

# தொடர் பாகிஸ்தானுக்கா? இந்தியாவுக்கா?



தற்போது பாகிஸ்தானில் நடைபெற்று வரும் இந்திய-பாகிஸ்தான் அணிகளின் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் பரபரப்பான ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது.

சுமார் 15 வருடகால இடைவெளியில் நடைபெறும் இப்போட்டிகள் பலராலும் ஆவலுடனும் உன்னிப்பாகவும் அவதானிக்கப் பட்டு வருகின்றன. இப்போட்டித் தொடர் ஆரம்பிக்கமுன்பு ஊடகங்களுக்குப் பேட்டியளித்த இந்திய அணித்தலைவர் கங்குலிஒருநாள் போட்டித் தொடரையும் டெஸ்ட் தொடரையும் தாம் கைப்பற்றி மீளுவோம்என சூளுரைத்தார். அதே போன்றே பாகிஸ்தான் அணியினரும் தாம் இந்திய அணிக்கு பாடம் புகட்டுவோம் என்று கூறினர். அதேபோன்று நடைபெற்று முடிந்த நான்கு போட்டிகளிலும் 2-2 என்ற சமநிலையில் இருக் கின்றன.

முதலாவது போட்டியில் இரு அணிகளும் உலக சாதனை ஒன்றை நிலைநிறுத்தியுள்ளன.

அதாவது இது வரை இரு அணிகள் ஒருநாள் போட்டிகளில் பெற்ற அதி கூடிய ஓட்டமாக 693 ஓட்டங்களைப் பெற்றன.

பாகிஸ்தானின் "ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்" என வர்ணிக்கப்படும் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தாரின் பந்து வீச்சையும் சமாளித்து இந்திய அணியினர் இந்த349 ஓட்டங்களைப் பெற்றது. அதேவேளை இந்திய அணியின் நட்சத்திரப்பந்து வீச்சாளர்களான

## இரு அணிகளும் நாளை களத்தில்

அனில்கும்ளே, ஹர்பஜன்சிங், அகர்கார் போன்றோரின் பங்களிப்பில்லாத நிலையிலும் இந்திய அணி அப்போட்டியில் வெற்றி பெற்றது. ஆயினும் பாகிஸ்தான் அணித் தலைவர் பெற்ற (122) சதம் சிறப்பம்சமாகும்.

பின்னர் நடைபெற்ற 2ஆம், 3ஆம் போட்டிகளில் பாகிஸ்தான் தொடர்ந்து வெற்றிபெற்றதால் தொடரைக் கைப்பற்றும் இந்திய அணியின் கனவு கேள்விக்குறியானது. அவ்வணியின் துடுப் பாட்ட வரிசை பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது மட்டுமன்றி இந்திய அணியின் பந்து வீச்சும் கேள்விக் குறியானது. முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம்உல் ஹக்கின் சதம் (122) தோல்வியை தவிர்க்க முடியாமல் போனமை போன்றே இரண்டாவது போட்டியில் இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கரின் சதமும் (141) பாகிஸ்தானின் வெற்றியை தவிர்க்கத் தவறிவிட்டது.

அதேவேளை இரு அணிகளினதும் வீரர்களான ராவிட்(99), யசீர்ஹமீட்(98) ஆகியோரின் சதமடிக்கும் கனவுகளும் சிதறடிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தொடரில் இரு அணிகளும் சமநிலையில் இருப் பினும் இந்திய அணி தொடரைக் கைப்பற்றுவது அரிதாகவே புலப்படுகின்றது காரணம் பாகிஸ்தானிய நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களைப் போன்று இந்திய வீரர்கள் நின்று நிதானித்து ஆடுவதைக்காண முடியாதுள்ளது. செவாக் வழமையாக அ[illegible]ரடியாக ஆடி ஆட்டமிழப்பினும் அணித்தலைவர் கங்குலி, சச்சின் போன்றோரின் நிதானமற்ற ஆட்டத்தினால் இவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது. ஏற்கனவே தனது இலக்கு சச்சின் தான் என்று கூறியுள்ள பாகிஸ்தான் வீரர் அக்தாரின் பந்து வீச்சை நிதானமாக எதிர்கொண்டு சச்சின் ஆடினால் இந்திய அணியின் தோல்விகளைத் தவிர்க்க முடியும். அத்துடன் காயம் காரணமாக இந்தியாவின் பந்து வீச்சாளர்கள் ஓய்வில் இருப்பதால் அணியின் புதிய பந்து வீச்சாளர்களின் திறனும் அதிகரிக்கப் படவேண்டும். இந்த வகையில் இர்பான் பதான், பாலாஜி ஆகியோரின் பங்களிப்பு குறைத்து மதிப்பிட முடியாத ஒன்றாகும்.

குறிப்பாக இரு அணிகளும் அனுபவ வீரர்களுடன் புதிய முகங்களையும் அறிமுகப்படுத்தி சிறப்பாக திகழ்கின்றன. பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர் யசீர்ஹமீட் தேசிய அணிக்கு புதியவர் என்ற போதும் அவரது நிதானமான துடுப்பாட்டம் பாகிஸ்தான் அணிக்கு சிறந்த அடித்தளமாக அமைவதுடன் எதிர்காலத்தில் சிறப்பாக அமையும். அதே போன்று இந்தியாவின் பந்துவீச்சாளர்களான பதான், பாலாஜி ஆகியோரும் பந்து வீசுதலுடன் துடுப்பாட்டத்திலும் சளைத்தவர்களல்ல என்பது புலனாகிறது. 3வது போட்டியில் 12 பந்துகளில் 1சிக்சரும் 3பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

எனவே இரு அணி ளும் இத் தொடரில் ச[illegible] பலத்துடன் காணப்படுவதால் நாளை லாகூரில் நடைபெறவுள்ள5வதும் இறுதியுமான போட்டி மிகவும் பரபரப்பாகவும் திகில் நிறைந்ததாகவும் அமையும் என்பதும் கடைசிப்



பந்து வரை வெற்றி தோல்வியை நிர்ணயிக்கமுடியாத ஒன்றாகவும் அமையும் என்பதுடன் இறுதிப் போட்டி அமைதியாக நடைபெற வேண்டும் என்பதும் ரசிகர்களின் அவாவாகும்.

வடிவேல்



அமெரிக்காவின் சிறந்த பந்து காப்பாளரான ரிம்ஹவார்ட் (வயது-24) அமெரிக்காவின் நியூ யோர்க் மெற்றோஸ்ரார் கழகத்தில் இருந்து இத்தாலியின் மான்செஸ்ரர் யுனைட்டட் கழகம் பெரும் தொகைப் பணம் கொடுத்து வாங்கியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# கடும் போட்டி நிலவும் தென்னிலங்கைத் தேர்தல்களம்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறப் போகும் தேர்தலில் வெற்றியாருக்கு? யாரை தென்னிலங்கை மக்கள் தெரிவுசெய்யப் போகின்றனர்? வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் யாரைத் தெரிவுசெய்யப்போகின்றனர்? என்பதற்குப் பல்வேறு கருத்துக் கணிப்புக்கள்



வெளிவந்து கொண்டிருக்கின்றன. இங்கு வடக்கு கிழக்கில் பெரும்பான்மையான ஆசனங்கள் தமிழ் அமைப்பு ரீதியாகப் பார்க்குமிடத்து தமிழ் கூட்டமைப்புக்கே கிடைக்கும் என்பது உறுதியான விடயம். ஆனால் ஏனைய மாவட்டங்களை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது யார் வெற்றி பெறப்போகிறார்கள் என்பது குறித்து பார்த்தால் கடும் போட்டியே நிலவுகின்றது என்றே கூறலாம்.

இந்தத் தேர்தலை ஏற்படுத்த சந்திரிகா குமாரதுங்க துணிந்தமைக்கு முக்கிய காரணம் ஜே.வி.பி.யுடனான கூட்டு என்பது வெளிப்படையான விடயமாகும். அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவினர் இவ்வாறான கூட்டொன்றுக்கு விடாப்பிடியாக நின்றமைக்கும் இவ் விருகட்சிகளும் இணைந்தால் தேர்தல் வெற்றி நிச்சயம் என அவர்கள் கருதியமையே காரணமாகும்.



அதாவது கடந்த ஆண்டுத் தேர்தல் முடிவுகளின் படி பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைக் கூட்டும் போது பெரும்பாலான மாவட்டங்களில் அது ஐக்கிய தேசிய முன்னணி பெற்ற வாக்குகளை விட அதிகமாகும். எனவே இவ் இரு கட்சிகளும இணைந்தால் ஐக்கிய தேசிய முன்னணியை இலகுவாகத் தோற்கடித்து விட முடியும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே கூட்டணி அமைக்கப் பட்டதுடன் தேர்தலும் உருவாக்கப்பட்டது.

ஆனால் எந்தவொரு தேர்தலிலும் அதன் முடிவைத் தீர்மானிக்கும் குறிப்பிட்ட தொகை வாக்காளர்கள் நிலையாக ஒரு கட்சிக்கு வாக்களிப்பதில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும். அதாவது ஒவ்வொரு கட்சிக்கும் தீவிரமான ஆதரவாளர்கள் என்றொரு குறிப்பிட்ட தொகை வாக்காளர்கள் உள்ளனர். இவர்களைத் தவிர்ந்த ஏனையோர் காலத்திற்குக் காலம் மாறும் சூழ்நிலையை வைத்துக்கொண்டு வெவ்வேறு அணியினருக்கு வாக்களிப்பதாலேயே ஆட்சிமாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வகையில் கடந்த தேர்தலில் ஜே.வி.பி.அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு அதன் தீவிர ஆதரவாளர் தளம் விரிவடைந்தது என்பதை விட பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிமீதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிமீதும் வெறுப்படைந்தவர்கள் அளித்த வாக்குகளே அதிகம் என்ற விமர்சனம் முன்னரே வைக்கப்பட்டுவிட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி தனது 17 ஆண்டு கால ஆட்சியில் சுமார் 12 வருடங்களை யுத்தத்திற்குச் செலவிட்டது. அதன் ஆட்சிக் காலத்தில் பெருமளவு ஊழல்கள், துஷ்பிரயோகங்கள் நிலவின. ஆரம்பகாலத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக மக்களுக்கு நன்மைகள் கிடைப்பது போலத் தோன்றினாலும் காலப் போக்கில் அதன் பாதிப்புகள் வெளிப்படத் தொடங்கின. இதனால் மக்கள் வெறுப்படைந்தனர். அத்துடன் ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியை ஒடுக்கவும் தனது அரசியல்எதிரிகளை அடக்கி தான் ஆட்சியைக் கைப்பற்றித் தக்கவைக்கவும் பிரேமதாசா மேற்கொண்ட வழிமுறைகள், பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் படுகொலை என்பவற்றின் காரணமாக ஏற்பட்ட வெறுப்பு, யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் இவையெல்லாம் சிங்கள மக்களை ஆட்சி மாற்றத்துக்குத் தூண்டின. இதன் காரணமாக 1994 தேர்தலில் மக்கள் பொதுசன ஐக்கிய முன்னணியைப் பதவியிலேற்றினர்.

படித்தவர், பண்டாரநாயக்கவின் வாரிசு, கணவனுடன் இணைந்து சில சமாதான முயற்சிகளில் ஈடுபட்டவர், வன்செயலில் கணவனை இழந்த இரு பிள்ளைகளின் தாய் என்ற வடிவத்துடன் தேர்தலில் களமிறங்கிய சந்திரிகா குமாரதுங்கவை அச்சூழலில் பதவியில் ஏற்றினர்.

அவ்வேளையில் தென்பகுதியில் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியை ஒடுக்க ஐ.தே.க. அரசாங்கம் புரிந்த அரச வன்முறை காரணமாகத் தமது அப்பாவிப் பிள்ளைகளை இழந்தோர் பெருமளவில் சந்திரிகாவை ஆதரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


இவற்றைவிட முக்கியமானது அவர் சமாதானத் தேவதையாகப் புனைந்த வேடம். அதாவது யுத்தத்தால் பாதிப்படைந்த சிறிலங்காவை சமாதானம் மூலம் தூக்கி நிறுத்த வந்தவராகவே அவர் கணிக்கப்பட்டார்.

அவரைச் சூழ புத்திஜீவிகளான அமைச்சர்கள் பல்வேறு நிபுணத்துவம் வாய்ந்த நண்பர்கள் என ஓர் அறிவாளிகள் கூட்டமே இருந்தது. அதேவேளை பிரேமதாசா ஆட்சிக்கு எதிராக கருத்துக்களைத் துணிவுடன் முன் வைக்கும் ஊடகவியலாளர்கள் இருந்தனர். ஆனால் அவர் ஆட்சி செயற்படத் தொடங்கியதும் இவர்கள் எல்லாம் மெது மெதுவாகக் கலையத்தொடங்கினர். இறுதியில் அமைச்சரவையில் இருந்த புத்திஜீவிகள் கூட வெளியேறினர்.

அவர் நடத்திய "சமாதானத்துக்கான யுத்தம்" அவரது அனைத்து வேடங்களையும் களைந்தது. சிறிலங்கா பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு தலையெடுக்க முடியாத நிலையை அடைந்தது. இறுதியில் யுத்தமும் தோல்வியையே அவருக்குத் தேடிக்கொடுத்தது.

இந்நிலையில் இவ்விரு கட்சிகள் மீதும் வெறுப்படைந்தோர் புதியதோர் நேர்மையான அரசியல் சக்தியைத் தேடியே ஜே.வி.பி.யை ஆதரித்தனர் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஆனால் இப்பொழுது ஜே.வி.பி ஒரு கட்சியுடன் அணிசேர்ந்திருப்பதானது அதன் வாக்குப்பலத்தை அதிகரிப்பதை முற்றாக இல்லாதொழித்துள்ள அதேவேளை, முன்னர் வாக்களித்தோரும் வாக்களிப்பார்களா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.



இதேவேளை கடந்த இரண்டுவருடங்களாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அநுரா தலைமையிலான குழுவினரும் ஜே.வி.பி. யினரும் இணைந்து நடத்திய சமாதானத்திற்கு எதிரான இனவாதப் பிரச்சாரத்தின் அறுவடையை அதாவது இனவாதிகளின் முற்றுமுழுதான ஆதரவைப்பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதற்கு ஜாதிகஹெல உறுமய என்ற கட்சியின் சார்பில் பிக்குகள் அரசியல் பிரவேசம் செய்திருப்பதே காரணமாகும். ஒருபுறம் சனாதிபதி சந்திரிகா 'சமாதானம்' பேச மறுபுறம் ஜே.வி.பி 'தேசப்பற்று' பேசி இருதரப்பினதும் வாக்குகளைப்பெற்று ஆட்சிப்பீடம் ஏறப்போட்ட திட்டத்திற்கு பிக்குகளின் இந்நேரடி அரசியல் பிரவேசம் பலத்த அடியாக அமைந்துவிட்டது. பிக்குகளின் இந்நடவடிக்கை ஐக்கிய தேசியக்கட்சியை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையே பாதிக்கும் என்பது வெளிப்படையாகும்.

ஜாதிகஹெல உறுமயவில் சிகலஉறுமய உறுப்பினர்கள் போட்டியிட்டிருந்தால் அதனை எதிர்கொள்வது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிராது. அவர்களை ஏனைய அரசியல் கட்சிகளைப் போலவே கையாண்டிருக்கவும் முடியும். ஆனால் பிக்குகள் போட்டியிடுவதால் ஏற்படப்போகும் பாதிப்பை உணர்ந்து அவர்களுக்குப் பெருமளவு பணத்தைக் கொடுத்து தேர்தலிருந்து விலகியிருக்கச் செய்ய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



எவ்வாறாயினும் பிக்குகளின் நேரடி அரசியல் பிரவேசமானது பிரதான அணிகள் மீது வெறுப்புற்றோரை மூன்றாவது அணியான பிக்குகள் அணியில் இணைத்துவிடக்கூடும் என்றே எதிர்வுகூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க "சமாதான முயற்சிகள்" என்பது இன்று இலங்கை மக்கள் மத்தியிலும் சர்வதேச ரீதியிலும் பெரிதும் வரவேற்கப்படுகின்றதொன்று. இப்பொழுது இடம்பெறுகின்ற கருத்துக்கணிப்புக்கள் கூட யுத்தத்தை விட மக்கள் சமாதானத்தின் பக்கமே உறுதியாக நிற்கின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே "சமாதானத்தை" நிலைநிறுத்துவது யார்? என்பதில் கடும் போட்டி

இந்த முயற்சியில் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பெரும்பாலான சிங்கள மக்கள் விரும்புவதாக சி[...] கணிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன. கட[...] இரண்டு வருட காலமாக சமாதானச் சூழ[...] நிலைபெற்றிருப்பது இதற்குக் காரணமாகு[...] சமாதான முயற்சிகள் தீவிரமாக நகராவிட்[...] லும் நல்லது நடக்குமோ? என்ற எதிர்பார்ப்[...] மக்கள் மத்தியில் இருக்கின்றமை மறுக்[...] முடியாததாகும். இது ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்து சாதகமான நிலை என்பதும் உண்மையாகும்.

இதேவேளை இவ்விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலை அவர்களுக்குச் சாதகமானதாக இல்லை. முக்கியமாக என்னதான் ஜே.வி.பி. வெளிப்படையாகக் கூறிக்கொண்டாலும் அது இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக சமாதான முறையில் தீர்வு காண்பதை விரும்பாத கட்சி என்பதை மறுக்கமுடியாது. தமிழ் மக்கள் தன்னாட்சி அதிகாரம் ஒன்றை எதிர்பார்க்கையில் அதிகாரப் பரவலாக்கலை ஜே.வி.பி. முற்றுமுழுதாக ஏற்கவில்லை. ஒற்றை ஆட்சியின் கீழ் சில நிர்வாக அதிகாரப் பரவலாக்கலையே அது இன்று அரைகுறைமனத்துடன் கூறிவருகின்றது. இந்நிலையில் அதனை இணைத்துக்கொண்டு ஆட்சிப் பீடமேற முயலும் சந்திரிகா அம்மையாரால் சமாதான நடவடிக்கை மூலம் எத்தகைய தீர்வை எட்டமுடியும்?

அத்துடன் 1994 சந்திரிகா போட்ட சமாதான வேடத்தின்போது கரைந்தசாயம் இன்னமும் அவருடனேயே ஒட்டிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் மக்கள் அவரை நம்புவது கடினமே.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க கூறும் "10வருடங்களில் 10லட்சம்" வேலை வாய்ப்புக்கள் சந்திரிகா கூறும் "ஒருவருடத்தில் ஒரு லட்சத்து பத்தாயிரம் வேலை வாய்ப்புக்கள்" எல்லாம் வழமையான காற்றில் பறக்கும் வாக்குறுதிகளே என்பது மக்களுக்கு நன்கு தெரியும் எவ்வாறாயினும் இலங்கையில் சமாதானச் சூழல் நிரந்தரமாகும் வரை இவற்றையெல்லாம் விரும்பினாலும் எவராலும் நிறைவேற்றிவிட முடியாது.

இந்நிலையில் தென்பகுதி அரசியல் கடும்போட்டி நிரம்பியதாகவே காணப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவும், சந்திரிகா குமாரதுங்கவும் தீவிரமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்பு எச்சரிக்கை யெல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு சந்திரிகா மக்கள் மத்தியில் உலாவுவது போட்டி எத்தகைய கடுமையாக இருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது. இங்கேயும் ரணிலுக்கும் பிரச்சாரத்துக்கு சாதகமான நிலையையே சந்திரிகா ஏற்படுத்தியிருக்கின்றார் என்றே கூறவேண்டும். அதாவது தான் ஏற்படுத்திய சமாதானச் சூழல்தான் சந்திரிகா மக்கள் மத்தியில் அச்சமின்றிப் பிரச்சாரத்தில் ஈடுபடவழி வகுத்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க பெருமைப்படவும் கூடும்.

எல்லாம் சரிதான். யார் ஆட்சிப்பீடம் ஏறினாலும் நானே பாதுகாப்பு அமைச்சர் என்ற சனாதிபதியின் பிரச்சாரம் உறுத்தலான விடயமாகவேயிருக் கின்றது.

**வேலவன்**

### -அதிஉயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக-

# மீள்குடியமர்ந்த மக்கள் படையினரால் அச்சுறுத்தல் மனித உரிமை ஆணைக்குழு ஆராய ஏற்பாடு

(வடமராட்சி)

**வலிகாமம் வடக்கின் அதி உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்கள் தொடர்பாக ஆராய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளது.**

குறிப்பாக அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைக்குஅப்பால் உள்ள பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களது நிலை தொடர்பாக இவ்வதிகாரிகள் ஆராயவுள்ளனர். குறித்த பாதுகாப்பு முன்னரங்க நிலையங்களுக்கப்பால் உள்ள 600 மீற்றர் தூரப்பகுதி தவிர்ந்த எஞ்சிய பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரலாமென யாழ். படைத்தலைமை தொடர்ந்தும் அறிவித்து வருகின்றது.

எனினும் இவ்வாறான அறிவிப்பை அடுத்து புன்னாலைக் கட்டுவன் மற்றும்பண்ணாகம் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்களும், அங்கு நிலை கொண்டுள்ள படையினரால் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர்அதிகாரிகள் குழு, இப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் இடம்பெயர்ந்த இம்மக்களின் மீள்குடியமர்வுகை தொடர்பாக யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவையும், பலாலியில் சந்தித்து அவர்கள் பேச்சுக்களை நடாத்தவுமுள்ளனர். (27)

### 50 வீதத்தால் உயர்வு

பொதுத்தேர்தலை முன்னிட்டு சனாதிபதி, பிரதமருக்கான பாதுகாப்பு ஐம்பது வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்தார்.

தற்போது இவர்கள் இருவருக்கும் மொத்தமாக தலா 75 பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வேலை நிறுத்தம் மேற்கொண்ட வைத்தியர்கள் மீது கண்டனம்

(கொழும்பு)

டாக்டர்களின் பொது வேலை நிறுத்தத்தினால் 35,000 சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டன. 50,000 நோயாளர்கள் சிகிச்சைகள் பெறமுடியாமல் கடும் கஸ்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என தென்பகுதி பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஒரு வாரமாக இந்த வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இதனால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பலியாகியுள்ளனர். பொது மக்களின் நிதியினால் வைத்திய பட்டப்படிப்பு பெற்ற வைத்தியர்கள், பொது மக்களின் துன்பங்களைப் பாராமல் வேலை நிறுத்தம் மேற்கொண்ட வைத்தியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பலபொதுமக்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.



கடந்த சில நாட்களாக கிளிமாவட்ட வைத்தியசாலை வளாகம் முன்பாக அகற்றப்படாது துர்நாற்றமெடுத்த நிலையில் உள்ள குப்பை மேட்டினைப் படத்தில் காணலாம் (படம்.சோதி)

# பேரினவாதிகளின் கூட்டுப்பலத்தை எதிர்கொள்ள தமிழர்கள் ஓரணியில் திரளவேண்டும்

### -முதன்மை வேட்பாளர் மாவை. சேனாதிராஜா அழைப்பு

தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஜே.வி.பியினர் -சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகளின் கூட்டு நடவடிக்கைகள் தமிழ் மக்களின் விடுதலைக்கும் சமாதானத்தின் அமைதி வாழ்விற்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்ட அதிகார இழுபறியால் அவசரஅவசரமாக எம்மீது ஒரு தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது. இந்தத்தேர்தலைப் பயன்படுத்திய பேரினவாதிகள் பலம்பெறுவதற்காக பல வகைமுயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய பேரினவாதிகளின் முயற்சிகளும், எழுச்சிகளும் தமிழரது வாழ்விற்கு குந்தகமாக அமைந்துவிடும். எனவே தமிழ் மக்களும் ஓரணியில் திரண்டு கூட்டமைப்பினராகி பேரினவாதிகளின் கூட்டுப்பலத்தை சமாளிக்கக்கூடிய சக்தியுள்ளவர்களாக எம்மக்கள் மாறவேண்டும்.

இவ்வாறாக மக்கள் செய்யும் மாற்றமே இடைக்கால நிர்வாக சபையின் திட்டவரைபு அடிப்படையில் சமாதானப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவும் தமிழ்த் தேசிய இனத்துக்குள்ள சுய நிர்ணய அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டவும் இதற்குரிய சர்வதேச ஆதரவை வென்றிடவும் உதவும் என்றார். இம்மாற்றத்தை புலிகள் விரும்புவது போல் சனநாயக வழியில் உருவாக்க மக்கள் தமக்குள்ள வாக்குரிமைகளை சரிவரப் பயன்படுத்தவேண்டும்என்றார். (33)

# தென்மராட்சியில் படையினரால் புதிய காவலரண்கள் அமைப்பு

### -மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலுள்ள பல பகுதிகளிலும் புதிய காவலரண்களை நிறுவும் பணியில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இடம் பெற்று வரும் இந்த நடவடிக்கையின் போது சாவகச்சேரி, சங்கத்தானை, கைதடி, மீசாலை, மட்டுவில், கனகம்புளியடி ஆகிய பிரதேசங்களில் இத்தகைய காவலரண்கள் தீவிரமாக நிறுவப்பட்டு வருகின்றன. ஏராளமான படையினர் குவிந்து இக்காவலரண்களை நிறுவிவருவதுடன் இப்பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விசேட ரோந்துகளும் இடம் பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளன. (33)

# யாழ்.இல் கண்தானம் செய்ய 501 பேர் முன்வருகை

(யாழ்ப்பாணம்)

தாம் இறந்தபின் தமது கண்களைத்தானமாக வழுங்குவதற்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 501 பேர் முன்வந்துள்ளனர்.

ஒரு மனிதன் இறந்து 6 மணித்தியாலங்களுள் அவனது கண்களை இன்னொரு மனிதனுக்குத் தானம் செய்யலாம். இதனால் பார்வையற்றவர்கள் பார்வை பெறக்கூடிய பெரும் நன்மை உண்டு. இதனைச் சுட்டிக்காட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவர்கள் மேற்கொண்டுவந்த தீவிர முயற்சிகளின் பயனாகவே இவர்கள் தமது கண்களைத்தானம் செய்ய முன்வந்து தம் பெயர்களையும் பதிவு செய்துள்ளனர் (33)


## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் பின்வரும் பணிநிலைக்குத் தகைமை உள்ளவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை :- தொழில்நுட்ப உத்தியோகத்தர்

அகவை :- 24 வருடங்களிற்கு மேல்

தகைமை :- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (NDT)
அல்லது
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
பட வரைஞர்
DRAUGHTMEN SHIP

ஊதியம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளுக்குச் சமமான கல்வித்தகைமை, பட்டறிவு உள்ளவர்களும் 2004.04.05.ஆம் நாள் மாலை 3.00 மணிக்கு கீழ்வரும் ஆவணங்களுடன் நேரில் வருகை தரவும்.

★ கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
★ பட்டறிவுச் சான்றிதழ்கள்
★ நற்சான்றிதழ்கள்
★ பிறப்புச் சான்றிதழ் (மூலம்)
★ தேசிய அடையாள அட்டை

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்,
A9 நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

(சி-9427)



S.J.S லேணஸ்

கிளி.நகரில் S.J.S லேணஸ்

எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி/நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்பட்டு அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

தொடர்புக்கு:- S.J.S லேணஸ், பிரதான வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- ஆயப்பகுதி நடுவப்பணிமனை முன்பாக

நிர்வாகம் S.J.S லேணஸ்.

(4312)



**சிந்தனைக்கு**

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23 -03-2004

## மக்களின் குழப்பம்!

தென்னிலங்கையில் 34.6வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் வாக்களிப்போரில் சுமார் 44லட்சம் பேர் என ராவய பத்திரிகையின் கணிப்பீடொன்று கூறுகின்றது. அதாவது தென்னிலங்கையில் ஏப்.2 தேர்தலில் மூன்றில் ஒன்றிற்கு அதிகமானவர்கள் குழப்பத்துடன் உள்ளனர் எனக்கூறினும் மிகையாகாது. ஆனால் அவர்களை யார் ஆட்சியாளர்கள் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி படைத்தவர்களாகத் தீர்மானிப்பவர்களாக இருக்கப் போகின்றனர் என்பதும் வெளிப்படையானது.

சிறிலங்காவிலுள்ள வாக்காளர்களில் இக்குறிப்பிட்ட தொகையினர் குழப்பத்திற்கு உள்ளாகி இருப்பதும் ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஏனெனில் வருடாந்தம் ஒவ்வொரு தேர்தலும் வருடாந்தம் ஒரு கொள்கையையும் கொண்ட அரசியல் வாதிகள் கட்சிகள் தேர்தல் களத்தில் நிற்கும் போது மக்கள் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது இருப்பது எவ்வாறு ஆச்சரியத்திற்குரியதொன்றாக இருக்க முடியும்?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கூட்டணி சேர்ந்துள்ள ஜே.வி.பி.யும் கடந்த தேர்தலின்போது யுத்தத்திற்கு ஆதரவான கூட்டணியாகவே தேர்தலில் போட்டியிட்டன. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு என்பனவற்றை வலியுறுத்தி தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.முன்னணி தேர்தலில் வெற்றியீட்டியது. ஒருவகையில் கடந்த முறை சிங்கள மக்கள் வாக்களிப்பதறகுத் தெளிவானவரையறை இருந்தது. அதாவது யுத்தத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என்ற அடிப்படையில் அது இருந்தது.

ஆனால், தற்பொழுது இவ்விரு பிரதான கட்சிகளின் (கூட்டணிகளின்) நிலைப்பாட்டில் தெளிவான வரையறை இல்லை. இருதரப்புமே புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்றே கூறிவருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சுவாரததை ஆரம் பிக்கப்படும் என்பது அவர்களால் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதியாகவுள்ளது.

அது மாத்திரமல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணியோ தாம் ஆட்சிக்கு வந்தால் ஏப்ரல் மாதத்திலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் விடுதலைப்புலிகளுடன் ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகவும் இது அமையும் எனவும் கூறி வருகின்றது. அதற்கும் மேலாக இரண்டு ஆண்டு காலத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருகின்றார்.

இதேசமயம், சனாதிபதி சந்திரிகா குமாதுங்கவும் தமது கூட்டணி அரசாங்கத்தை அமைத்தால் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் எனக் கூறி வருவது மட்டுமல்ல, ஏற்கனவே இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் (இவை உண்மைக்கு மாறானவை என்பது வேறு விடயம்) சனாதிபதி சந்திரிகா வாக்குறுதி அளித்து வருகின்றார்.

இந்நிலையில்தான், வாக்காளர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். அதாவது, நாட்டிறகுச் சமாதானமே தேவை எனத் தீர்மானித்துள்ள வாக்காளர்கள் இவர்களில் யார் உண்மையில் சமாதானத்தைக் கொண்டு வரக் கூடியவர்கள் என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, இவ்விரு தரப்பினரின் கடந்த கால வரலாற்றைக் கொண்டு எத்தகையதொரு முடிவுக்கும் மக்கள் வர முடியாது என்பதே உண்மை. ஏனெனில், இவ்விரு தரப்புமே கடந்த காலத்தில் யுத்தத்தை முனைப்புப் படுத்தியவர்களாகவே இருந்துள்ளனர் என்பதே உண்மையாகும். அதிலும் குறிப்பாக, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக் கூறி அடக்கு முறைகளை மேற்கொண்டவர்கள். ஒரு தரப்பினர் ஒரு கொடிய யுத்தத்தைச் சமாதானத்திற்கெனக் கூறியே நடத்தியவர்கள்.

அது மட்டுமல்ல, இப்பிரதான கட்சித் தலைவர்கள் தற்பொழுது சேர்ந்துள்ள / சேர்த்துள்ள கூட்டணிக் கட்சிகள் குறித்து வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாகவுள்ளனர். எடுத்துக்காட்டாகச் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணிக்கு வாக்களிப்பவர்கள் - சனாதிபதி சந்திரிகா சமாதானம் குறித்து அளிக்கும் வாக்குறுதிகளுக்கு ஜே.வி.பி. எவ்வாறு அனுசரித்த போக்கைக் கொண்டிருக்கும் என்ற தீர்மானத்திற்கும் வர வேண்டியவர்காளவுள்ளனர். ஏனெனில், ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தனது தெளிவான நிலைப்பாட்டை வெளியிடாதது மட்டுமல்ல, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அது முன்வைத்துள்ள யோசனைகள் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எட்ட உதவப்போவதில்லை.

இத்நிலையில்தான் சிங்கள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கும், முடிவெடுப்பதற்கும் பெரும் சிரமப்பட வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது, நாட்டில் உண்மையான சமாதானத்தைக் கொண்டுவரும் பலம் மிக்க சக்தி யார் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனலாம். இத்தகைய சிக்கல் காரணமாகவே, வாக்காளர்களில் பெரும்பான்மையானோர் தீர்மானிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஆனால், இவ்வாக்காளர்களே சிறிலங்கா அரசின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி பொருந்தியவர்களாக இருப்பார்கள். அதாவது, இரு பிரதான கட்சிகளின் கூட்டணிக்கும் நிரந்தர வாக்கு வங்கிகளைக் குறிப்பிட்டளவில் வீதாசரத்தைக் கொண்டதாக இருப்பினும் அது தேர்தலில் வெற்றி பெறவோ அன்றி பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் பெறவோ போதுமானதாக இருப்பதில்லை. தற்பொழுது குழப்பத்திற்குள்ளாகியுள்ள கட்சி சாராத வாக்காளர்களே இவற்றைத் தீர்மானிப்பதாக இருக்கும். இவர்களே ஆட்சியாளர்களின் தாரதரங்களையும், இறுதி நேரத்தில் நிகழும் சம்பவங்களையும் கொண்டு வாக்களிப்பவர்கள் அரசியல் கட்சிகளுக்கு அச்சுறுத்தலானவைகள். ஆகையினால், தற்பொழுது அதாவது, இத்தேர்தலிலும் அவர்கள் எடுக்கப்போகும் தீர்மானமே சிறிலங்காவின் எதிர்கால ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

# நிரந்தர சமாதானம் ஏற்படுவதை தடுக்க சிலர் முனைவது சாபக்கேடானதாகும்!

**அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் விசனம்**

எமது நாட்டின் பெரும்பாலன மக்களும் உலகநாடுகளும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமென விரும்பும் அதேவேளை குறிப்பிட்ட சிலர் மட்டும் சமாதானத்தை விரும்பாது எதிராக செயற்படுவது எமக்கு விதிக்கப்பட்ட சாபக்கேடாகும் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 20 வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தை இரண்டு மாதங்களில் முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக புலிகளுடன் எமது அரசாங்கம் முழு மூச்சாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட வேளையில் அதனைக் குழப்பியடிக்கும் வகையில் சனாதிபதி புலிகளின் கப்பல்கள் மீது தாக்குதலை நடத்தினர் இதனால் கடற்புலி உறுப்பினர்கள் சிலர் பலியாகினார்கள் இந்தவகையில் அவர் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் புலிகளுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறுவது நகைப்புக்கிடமாகவுள்ளது.

ஆயினும் சனாதிபதி சந்திரிகா தனது தனிப்பட்ட சுயலாபத்திற்காகவும், பதவிஆசை காரணமாகவும், தன்னிச்சையாக பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார் இதனால் சனாதிபதி அதிகாரத்தை தனது சுயலாபத்திற்காக பயன்படுத்தி வருகின்றார் தொடர்ந்தும் இவ்வாறே மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன் 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சனாதிபதி ஒரு வருடகால எல்லைக்குள் நிறைவேற்று அதிகார முறையையொழித்து பாராளுமன்ற ஆட்சியை ஏற்படுத்துவதாக மக்கள் விடுதலை முன்னணியினருக்கு எழுத்து மூலம் கடிதம் வழங்கினர். இன்று வரை சனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தாரா? முடியாத விடையங்களுக்காக பொய் வாக்குறுதிகளை அள்ளிவீசுவதில் சனாதிபதி சிறந்தவர். இன்று ஜே.வி.பி. நிறைவேற்று சனாதிபதி ஆட்சிமுறை பற்றி எதனையும் கூறாத நிலையில் இரண்டு வருடங்களில் சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்து விடும் இந்நிலையில் எப்போது இந்த ஆட்சிமுறையை ஒழிக்கப்போகிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவத்தின் மனோநிலை பாதிப்புற்றுள்ளது அவர்களால் முறையாக போரிட முடியாது

**எல்லாவல மெத்தானந்த தேரர் கவலை**

ஆட்சிக்கு வரும் தரப்பினர் யுத்தத்தினை வைத்து நன்கு சம்பாதிக்கின்றார்கள். நாடும் இனமும் அவர்களுக்கு தேவையற்றது அப்பாவி சிங்கள இளைஞர்கள் அவர்களது உயிர்களை தியாகம் செய்தனர். இன்று போலி சமாதானம் என்ற பெயரில் நாட்டைப்பிரிக்க முற்படுகின்றனர். பொலிசார் இன்று நேர்மையாக செயல்பட முடிகின்றதா? அரசியல்வாதிகள் பொலிஸ்பெறுப்பதிகாரியின் நாற்காலிகளில் அமருகின்றனர் இராணுவத்தினர் முறையாக போரிட முடிவதில்லை இராணுவத்தின் மனோநிலைகூட பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புளத் சிங்களவில் நடைபெற்ற கூட்டத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் எல்லாவேல மெத்தானந்ததேரர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,1972ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தத்தில் என்ன நடந்தது எமது சிறார்கள் வரலாற்று பாடத்தை கற்கும் சந்தர்ப்பம் இல்லாமலாக்கப்பட்டது. மொழி அழிக்கப்பட்டது. எமது முன்னோர்கள் பற்றி எமது இளம்சந்ததிக்கு தெரியாமல் போனது.

இறுதியாக இந்த அரசாங்கத்தில் இருந்த கல்வி அமைச்சர் மீண்டும் வரலாற்றை ஒரு பாடமாக அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தார். ஆனாலும் பாடநூலின் முகப்பில் துட்டகை முனு மன்னனின் படம் இடம்பெற்றால் எல்லாளனின் படமும் இடம்பெற வேண்டும் என்பதே அவரின் கோரிக்கையாக இருக்கின்றது.

இவ்வாறெல்லாம் எமது இனம் அழியும் போது நாம் எப்படி விகாரையில் மட்டும் இருக்க முடியும் அரசியலில் கட்சியின் நிறங்களுக்கேற்ப சீமெந்துக் கூரைத் தகடுகள் போன்றவற்றையே மக்கள் இதுவரை பெற்றனர். ஆனால் இம்முறை தேர்தலில் பௌத்த மதத்தை பாதுகாக்க மக்கள் தமது ஆணையை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஜே.வி.பி.யின் அமைச்சு கோரிக்கையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் பலர் விசனம்!

ஜே.வி.பி.யினர் கேட்டுள்ள அமைச்சு பொறுப்புக்களால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பலர் விசனமடைந்துள்ளனர் என 'சண்டே டைம்ஸ்' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் ஜே.வி.பி.யின் சார்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கவுள்ளோர் பற்றி அக்கட்சியின் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச அறிவித்துள்ளார். அதன்படி விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம், கிராமிய அபிவிருத்தி, தேசிய புராதனச் சொத்தும் கலாச்சாரமும் போன்ற அமைச்சுக்கள் அக்கட்சி உறுப்பினர்களின் பொறுப்புள்வரும் என அவர் கூறியுள்ளார்.

எனினும் ஜே.வி.பி. இப்பிரதான அமைச்சுக்களைக் கோருவதன் மூலம் மேலதிக நன்மைகளைப் பெறப்போவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இதைவிட நான்கு அமைச்சுக்களின் பிரதியமைச்சர் பதவிகளையும் ஜே.வி.பி. கோருகின்றது. அத்துடன் தென்பகுதி .சு.க. பிரதிநிதியொருவர் தென்மாகாண சபையில் அங்கத்தவரான பிரேமசிறி மானகே மீன்பிடித்துறை பிரதியமைச்சராக வரும் நோக்கில் மீன்பிடிக் கிராமங்களில் வாக்கு வேட்டையில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

# பொதுத் தேர்தல் பணிகளில் 150 ஆயிரம் அரச ஊழியர்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கு 150 ஆயிரம் அரச ஊழியர்களை ஈடுபடுத்தவுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்காக ஊழியர்களைத் தெரிவு செய்யும் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சொகைப் அக்தாரை விஞ்சும் மொகமட் சமியின் பந்துவீச்சு

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான மொகமட் சமியின் பந்து வீச்சு அவ்வணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சொகைப் அக்தாரின் இடத்தைப் பிடித்திருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

அக்தாரின் பந்து வீச்சு மணித்தியாலத்துக்கு 100.2 மைலாக இருக்கின்ற நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இந்தியாவுக்கெதிராக அவர் பந்து வீசும் போது அதன் வேகம் 100 மைல்கள் எனக் கணிப்பிடப்பட்டது.

எனினும் ஓரிரு பந்துகளில் மட்டும் இது அறியப்பட்டதால் இதனை பதிவு செய்யாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.




## சத்திர சிகிச்சை

அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீக்கு, கணுக்காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் மே மாதம் சிம்பாவே சுற்றுப் பயணத்தில் அவுஸ்திரேலிய அணியில் அவர் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

பிரட்லீ இது பற்றி கூறும் போது, காலில் வருத்தத்துடனேயே தான் போட்டிகளில் பங்கு பற்றியதாகவும் இனி அது சாத்தியமாகாது எனவும், சத்திர சிகிச்சையின் பின்பு முடியுமானவரை விரைவில் பங்கேற்பதாகவும் கூறியுள்ளார்.

# தமிழரின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வரும் தேர்தல் மூலம் வழியமைப்போம்

## மன்னார் மாவட்ட ஆயர் கோரிக்கை

(மன்னார்)
சமாதானம் தொடர்ச்சியாக நிலைத்து மக்கள் நன்மை அடைய வேண்டும். தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகள் மதிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும். எனவே அதற்கு வழியமைக்க வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் தமது வாக்குகளை தவறவிடாமல் பயன்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆயரால் மக்களுக்கு விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் ஆயர் மேலும் தெரிவிக்கையில்

சமாதானம், சாந்தி, அமைதி நிலைக்க எமது வாக்குகளை சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் உரிமைப் போராட்டத்திற்கு உழைப்பவர்களை அறிந்து நாட்டில்சமாதானம் நிலைக்க வழி வகுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1996இல் காணாமல்போன 13 இளைஞர்கள் குறித்த ஆட்கொணர்வு மனு விசாரணை

(வடமராட்சி)
1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 13 தமிழ் இளைஞர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பில் உரிய விசாரணையை நடாத்தி, அவ்விசாரணைகளின் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க சாவகச்சேரி நீதவானுக்கு, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கட்டளையைப் பிறப்பத்துள்ளார்.

அத்துடன் மனுத்தாரர்களை எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜராக உத்தரவிட்டுள்ள அவர், மேல்நீதிமன்றில்உள்ள உரிய வழக்கேடுகளை அங்கு அனுப்பி வைக்கவும் மேல் நீதிமன்ற பதிவாளரை பணித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த பின்வரும் 13 இளைஞர்கள் மீதான ஆட்கொணர்வு மனுக்களே விசாரணைக்கு எடுக்கப் படவுள்ளது.

அ.கோடீஸ்வரன் (நாவற்குழி), ஏ.திலகரட்ணம் (நாவற்குழி), கே.கேதீஸ்வரன் (நாவற்குழி), ஜே.அமலநாதன் (நாவற்குழி), ஈ.ஜெயசீலன் (நாவற்குழி), எம்.சிவராசா (மட்டுவில்), எம்.ஜெயரட்ணம் (மட்டுவில்), வ.திருவருட்செல்வம் (கோயி லாக்கண்டி), பி.கோணேஸ்வரன் (கோயிலாக்கண்டி), பி.ரவீந்திரன் (கைதடிதெற்கு), எஸ்.சிவகுமார் (தச்சன் தோப்பு), கே.புஸ்பராசா (தச்சன் தோப்பு), எஸ்.தர்மலிங்கம் (கந்தரோடை) (25)

## சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு குறித்த

# முன்னைய நிலைப்பாட்டை அநுரா மாற்றிக்கொண்டாராம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரங்களையும் வழங்கப்போவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் ஊடக மாநாடு ஒன்றை நடத்தியபோது இவ்வாறு தெரிவித்தார்.

சில காவல்துறையினர் கட்சி சார்பாக நடந்து கொள்வதாகவும், இதனால் தமது முன்னணியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பாதகமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். அதேவேளை, தற்சமயம் காவல்துறை ஆணைக்குழுவின் செயற்பாட்டால் தேர்தல் வன்முறைகள் கடந்த காலங்களை விட குறைந்துள்ளது என்பதை மங்கள சமரவீர ஏற்றுக் கொண்டார். இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால் காவல்துறை ஆணைக் குழு கலைக்கப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க மாவ பகுதியில் வைத்து வெளியிடும் கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் மங்கள சமரவீரவை கேள்வி கேட்டார்கள் இவர் அதற்கு பதிலளிக்கையில்அநுரா பண்டாரநாயக்க தனது தவறைத் திருத்துக் கொண்டதாகத் தெரிவித்தார். (32)

# களனி திஸ்ஸ மின்நிலையம் தீ விபத்தினால் சேதம்

களனி திஸ்ஸ அனல் மின் நிலையத்தில் நேற்று முற்பகல் தீ விபத்து ஏற்பட்டு தேசம் ஏற்பட்டுள்ளது. இத்தீவிபத்தினால் மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது என்றும், இந்நிலையத்தின் பிரதான பகுதிக்கு தீ பரவாது தடுக்கப் பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

களனி திஸ்ஸ மின்நிலையத்திலிருந்து 1065 மெகா வாற்ஸ் மின் உற்பத்தி செய்யப்படுவதாகவும், விபத்தினால் 50மெகாவாற்ஸே குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கச்சதீவு யாத்திரிகர்களுக்கு கடற்படை கடும் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)
கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவத்திற்குச் செல்லவுள்ள அடியார்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் பல்வேறு நிபந்தனைக் கெடுபிடிகளை விதித்துள்ளனர்.

வரும்30ஆம் திகதி இடம் பெறவுள்ள இந்த உற்சவ நடைமுறை சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட கடற்படைத்தளபதி கேணல் இரத் நாயக்க வடபகுதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் கருணாரட்ண கச்சதீவு பங்குத்தந்தை ஜெபநேசன் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மாதிலகநாயகம் போல் ஆகியோருடன் மேலும் பல படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

* குறிகாட்வான் இறங்குதுறையிலிருந்து மூன்று படகுகள் மட்டுமே அடியார்களை ஏற்றிச்செல்லும் சேவையில் ஈடுபடமுடியும்

*.அடியார்கள் கடற்படையினரால் வழங்கப்படும் அடையாள அட்டை வைத்திருக்கவேண்டும்

*.காலையில் இருந்து மாலை வரையுமே தேவாலயத்தில் அடியார்கள் தங்கியிருக்க முடியும் என்ற நிபந்தனைகள் கூட்டத்தில் விதிக்கப்பட்டு இவற்றை மீறுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று படையினர் அறிவித்துள்ளனர். (33)

# புலமைப் பரிசில்பெற்ற மாணவர்கள் பூநகரியில் கௌரவிப்பு

பூநகரி கோட்ட மட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பங்கு பற்றி சித்திபெற்ற மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பாராட்டுவிழா நேற்றுக்காலை 8.30 மணியளவில் முழங்காவில் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மாலை போடப்பட்டு கௌரவிக்கப்பட்டு 14 மாணவர்கள் முழங்காவில் ம.வி இற்கு அழைத்து செல்லப்பட்டனர் மங்கல விளக்கை இராசேஸ்வரக்குருக்கள் ஏற்றினர் தியாகி அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சிவசாமி ஏற்றினர் அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை நாச்சிக்குடா காவல் நிலைய பொறுப்பதிகாரி ஏற்றினார் வரவேற்புரையை முழங்காவில் ம.வி. ஆசிரியர் திருமதி விஜயராஜன் ஆற்றினர் தொடர்ந்து தலைமையுரையை பூநகரிக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி. கணபதிப் பிள்ளை ஆற்றினர்.

தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன பெற்றார் சார்பில் நடராஜனும் ஆசிரியர் சார்பில் இதயராஜனும் அதிபர் சார்பில் நா. கணேஸ்வரநாதனும் ஆற்றியதுடன் வாழ்த்துக்களை அன்பகத்திற்கு பொறுப்பான போதகர் எட்மன் மைக்கல் பொன் தில்லைநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி) க.அருண் மாஸ்ரர் (தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர்) ஆகியோரும் ஆற்றினர்.

தொடர்ந்து புலமைப்பரிசிலில் சித்திபெற்ற 12 பேருக்கும் அகில இலங்கை சமூகக்கல்வி போட்டியில் சித்திபெற்ற ஒரு மாணவனுக்கும் பூநகரிக் கோட்டத்தில் 3A எடுத்த ஒரு மாணவனுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (34)

### ஐ.ம.சு.மு..

யான ஒரே விஞ்ஞாபனம் எனத் தெரிவித்துள்ளது.

இது குறித்து முன்னணியின் தவிசாளர் நந்தனகுணதிலக தெரிவிக்கையில், கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்ட தேர்தல் வ ி ஞ ் ஞ ா ப ன த ் த ி ன ் கருத்துக்களுக்கு மாத்திரமே தாம் பொறுப்புக்கூற முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

### இறந்தவர்..

சங்கரிஅவரைச்சுகம் விசாரித்தும் அவரைத்தான் மறக்கவில்லையெனவும் குறிப்பிட்டு கடிதம் ஒன்றை எழுதியுள்ளதுடன் அவரைத் தனக்கே வாக்களிக்கும்படி கோரி துண்டுப்பிரசுரம் ஒன்றையும் இணைத்து அனுப்பியுள்ளார். இவ்வாறு வேறு சிலருக்கும் ஆதரவு கோரிகடிதம் வந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (சோ)

### இரு..

இலங்கை மன்றக் கல்லூரியில் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனமே, மட்டுமே நடைமுறையில் உள்ளது. இரண்டாவது முறையாக விஞ்ஞாபனம்எதுவும் வெளியிடப்பட வில்லை என அவர் குறிப்பிட்டார். (32)

### தயாசந்த..

கிளாலி, மண்டைதீவு, ஊர்காவற்துறை, புங்குடுதீவு, நயினாதீவு, கரைநகர், காங்கேசன்துறை ஆகிய கடற்படை முகாங்களுக்கு நேரில் சென்ற கடற் படைத் தளபதி அந்தந்த முகாங்களின் நிலமைகளையும் அந்த முகாங்கள் தாக்குதல்களை எதிர்கொள்ளக்கூடிய நிலமைகளையும் ஆராய்ந்துள்ளார்.

இந்த பயணத்தின்போது கடற்படைத்தளபதியுடன் கடற்படை நடவடிக்கை செயலக பணிப்பாளர், கடற்படை புலனாய்வுத் துறைப் பணிப்பாளர், உட்பட்ட பலகடற்படை அதிகாரிகளும் உடன் சென்றனர்.

### புலிகள்..

நான்காம் திகதி பொடோ ஆய்வுக் குழுவிற்கு மத்திய அரசு அனுப்பி உள்ளதாகவும் பொடோ மறு ஆய்வுக்குழு நீதிபதி சகாரியா கூறினார். இது குறித்து பரிசீலனை செய்து மத்திய அரசிற்கு பொடோ மீளாய்வு அனுப்ப வேண்டுமா என்பது குறித்து முடிவெடுப்போம் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு இயக்கம் ஒன்றின் மீதான தடையை நீக்குவதற்கு பொடோ மறு ஆய்வுக் குழுவிற்கு அதிகாரம் உண்டா எனக் கேட்கப் பட்டபோதும் அதற்கு அதிகாரம் உண்டெனவும் தெரிவிக்கப்பட்டது.

### சனாதிபதியின்..

இரு தரப்புக்கள் சமாதானத்தை முன்கொண்டு செல்ல முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் இதனையே வலியுறுத்துகின்றனர். சனாதிபதி தமிழீழ விடுதலைப்புலிகள் தம்முடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறிய கருத்தினை அரசியல் துறைப் பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வன் நிராகரித்துள்ளார். நாட்டில் தற்சமயம் நிலவும் போர் நிறுத்தம் நிரந்தர சமாதானமாக மாறுவதற்கு பல தடைகளை தாண்டிச் செல்லவேண்டும். இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்வைத்திருக்கும் சமாதான முன்னெடுப்புக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைக்கு சனாதிபதியால் மாற்றுத்திட்டத்தை இதுவரை முன்வைக்க முடியவில்லை. வடக்கு கிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முடியும் எனக் கூறிய அவர், ரோக்கியோ பிரகடனத்தின் படி 10 நிபந்தனைகளின் கீழேயே பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது எனினும் தாம் ஆட்சிக்குவந்தால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப்படும் என சனாதிபதி கூறுவது சமாதான முயற்சிகளை இடையில முறிக்கும் செயலாகும் என குறிப்பிட்டார். (32)

### கிளிநொச்சி...

யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வந்த பகுதியில் 20 வாக்களிப்பு நிலையங்களும், யாழ்ப்பாணத்திருந்து வன்னி வருகின்ற மக்கள் பரிசோதக்குட்படுத்தும் பகுதியில் அமைக்கப்படவுள்ள 31 நிலையங்களிலும் சென்று மக்கள் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வாக்களிக்கச் செல்லும் பொழுது பொதிகளை தங்களுடன் எடுத்துச் செல்லாத பட்சத்தில் எந்த வித தடையுமின்றி அவர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த வகையில் வாக்களிக்கச் செல்கையில் வாக்காளர் அட்டையுடன் செல்லும் பொழுது எந்தவித பரிசோதனையுமின்றி வாக்களிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

☐ உட்செல்லும் வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லும்பொழுது வாக்களிப்பதற்கு ஏதுவாக எத்தனை வரிசைகள் அமைக்கப்பெற்று வாக்களிக்க இடமளிக்கப் பட்டுள்ளன?

குறிப்பாக, அன்றைய தினம் வாக்களிக்கச் செல்லும் வாயிலூடாக சாதரண மக்களும் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ள தால் வாக்களிக்கச் செல்வதற்கு எட்டு வரிசையிலே உட்செல்வதற்கு அனுமதித்துள்ளார்கள். நாங்கள் அவர்களுடன் மீண்டும் இது குறித்து கலந்துரையாடவுள்ளோம். குறைந்தது பத்து வரிசைகள் மூலமாவது வாக்களிக்க மக்கள் சென்று வாக்களிக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியுமென நம்புகின்றேன் என்றார்.

☐ இத்தேர்தல் காரணமாக ஒரே இடத்தில் எல்லா வாக்காளர்களும் ஒன்று திரள்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றதால் மக்கள் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கின்றது. இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

இது குறித்து தேர்தல் ஆணையாளருடன் கலந்துரையாடிய பொழுது மக்கள் போக்குவரத்திற்கான நடவடிக்கைகளுக்கு ஏற்படவுள்ள செலவினங்களைத் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளார். அந்த வகையில் உள்ளூர் போக்குவரத்துக்கழக மற்றும் கூட்டுறவு வாகனங்கள், பாரஊர்திகள் சங்க வாகனங்கள் மூலம இந்நடவடிக்கையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

☐ வாக்களிக்கும் பகுதி இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், இவை எந்தெந்த செயலர் பிரிவுக்குட்பட்ட வாக்காளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளதென்பனை தெரிவிப்பீர்களா?

முதலாவதாக இரண்டு தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு தொகுதியில் கண்டாவளை, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வாக்காளர்களை 9 தொடக்கம் 34 வாக்களிப்பு உள்ள நிலையங்களை உடைய அந்தப் பகுதியினை வன்னியில் இருந்து செல்லும் பொழுது உள்ள முதலாவது பரிசோதனை நிலையத்தில் அமைக்கவுள்ளோம். யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்ற பகுதியிலுள்ள சோதனை நிலையத்தில் இரண்டாவது வாக்களிப்புத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. இதில் பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வாக்காளர்கள் வாக்களிக்கவும் இதில் ஒன்று முதல் எட்டு வரையான சாவடிகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கும் 34 முதல் 50 வரையான வாக்களிப்பு நிலையங்கள் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

☐ குறிப்பாக, கிளி. மாவட்டத்தில் முதியோர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் கணிசமான அளவில் இருக்கின்றனர். அவர்களுக்கு வாக்களிப்புச் சாவடிக்கண்மையாகச் சென்று வாக்களிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதா?

ஆம் இது குறித்து படை அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இதற்கென ஐந்து பயணிகள் பேருந்து சேவையிலீடுபடுத்தப்பட்டு இதன் மூலம் வயோதிபர்கள் ஊனமுற்றோர்கள் வாக்குச் சாவடிக்கருகாமையில் வந்து வாக்களிக்கவும் திரும்பவும் அவர்களை ஏற்றிச் சென்றிறக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

எனவே, இந்நிலையானவர்கள் எவ்வித சிரமமோ அச்சமோ கொள்ளாது வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதென்று தெரிவித்தார். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.